# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.02/2023** **நாள் : 10.01.2023**

வேளச்சேரி–தாம்பரம் சாலையில் (தேசிய காற்று சக்தி நிறுவனம் எதிரில்) தற்போதுள்ள 800 மி.மீ விட்டமுள்ள கடல்நீர் சுத்திகரிப்பு பரிமாற்றக் குழாயினை மடிப்பாக்கம் குடிநீர் விநியோக அமைப்புடன் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 11.01.2023 மற்றும் 12.01.2023 ஆகிய நாட்களில் பகுதி–13, 14 மற்றும் பகுதி-15 ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் நிறுத்தம்

சென்னை குடிநீர் வாரியம் தகவல்

வேளச்சேரி-தாம்பரம் சாலையில் (தேசிய காற்று சக்தி நிறுவனம் எதிரில்) தற்போதுள்ள 800 மி.மீ விட்டமுள்ள கடல்நீர் சுத்திகரிப்பு பரிமாற்றக் குழாயினை மடிப்பாக்கம் குடிநீர் விநியோக அமைப்புடன் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் நெம்மேலி 110 எம்.எல்.டி கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படவுள்ளது. எனவே, பகுதி-13, 14 மற்றும் பகுதி-15 ஆகிய பகுதிகளில் 11.01.2023 மற்றும் 12.01.2023 ஆகிய நாட்களில் குழாய் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

ஆகையால், பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள கீழ்காணும் அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| பகுதிப் பொறியாளர்-13 (அடையாறு) | கைபேசி எண்.8144930913 | தரமணி, வேளச்சேரி மெயின் ரோடு |
| பகுதிப் பொறியாளர்-14 (பெருங்குடி) | கைபேசி எண்.8144930914 | ஒக்கியம்-துரைப்பாக்கம், கொட்டிவாக்கம், பாலவாக்கம், பெருங்குடி, பள்ளிக்கரணை, மடிப்பாக்கம், புழுதிவாக்கம் |
| பகுதிப் பொறியாளர்-15 (சோழிங்கநல்லூர்) | கைபேசி எண்.8144930915 | சோழிங்கநல்லூர், செம்மஞ்சேரி |

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்